From-39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.

C.C.No. 221 /2021

Deposition of witness for: PW - 4

| | | | |
|---|---|---|---|
| Name | : Packiyam | Father/Husband Name | : Muniyandi |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 13.04.22 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2022.

முதல் விசாரணை:

நான் கண்ணாபுரத்தில் வசித்து வருகிறேன். விவசாயகூலிவேலை செய்கிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள 2-வது கையெழுத்து என்னுடையதுதான். 22ம் தேதி 6-வது மாதம் ஒரு வருடத்திற்கு முன்பாக ஒருநாள் காலை சுமார் 9 மணியளவில் பலசரக்கு கடை அருகே வைத்து போலீசார் வந்து விசாரித்து படம் வரைந்து சாட்சியாக கையெழுத்து கேட்டதன்பேரில் நானும் கோவிந்தராஜ் என்பவரம் கையெழுத்து செய்தோம். பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆகும். போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை:

நான் என்ன படித்துள்ளேன் என்றால் படிக்கவில்லை. எத்தனை போலீசார் சம்பவ இடத்திற்கு வந்தார்கள் என்றால் 2 போலீசார். எவ்வளவு நேரம் விசாரித்திருப்பார்கள் என்றால் 10 நிமிடங்கள். போலீசார் விசாரித்த இடத்தில் எனக்கு வீடு இல்லை என்றால் இருக்கிறது. என்னிடம் வெற்றுத்தாளில் போலீசார் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் எழுதித்தர்ன வாங்கினார்கள். அதில் என்ன எழுதியிருந்தது என்ற விவரம் தெரியாது என்றால் சரிதான். இந்த வழக்கு சம்மந்தமாக தனியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.